தலைப்பு 110 – நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 110 – நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 ஜுன் 26 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 செப்டம்பர் 22 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன. நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக

தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06.்.2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சுனால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன்

காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள

(அ) வைப்புக்கள்

நிதிக்கூற்றுக்களுக்குரிய வைப்புக் கொடுப்பனவு மற்றும் மீதிகளை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடு அவதானிக்கப்பட்டது.

கணக்காய்வு அவதானிப்பு	பிரதபிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
செயற்திட்ட நடவடிக்கைகள் முடிவடைந்து வைப்பு தொகை விடுவிக்க முடியுமான 6 நிறுத்த பணம் வைப்பு ரூபா 9,690,402 தொகை விடுவிப்பதற்கு மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்காததுடன், அந்த பெறுமதி பொது வைப்புக் கணக்கில் தொடர்ந்துமநிறுத்தி வைத்திருந்தது.	எதிர்காலத்தில் நிறுத்த பணம் விடுவிக்க இருப்பதாக அறிவித்திருந்தது.	உரியவாறு நிறுத்த பணம் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்பு	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
திறைசேரி அச்சீடு SA-10 பிரகாரம் மீளாய்வாண்டில் நிதியல்லாத சொத்துக்கள் கொள்வனவு பெறுமதி ரூபா 6,763,417 தொகை ஆன போதும், திறைசேரி அச்சீடு SA-82 பிரகாரம் அதன் பெறுமதி ரூபா 6,526,162 தொகை ஆனதால் ரூபா 237,255 தொகை குறைவாக நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது.	2024.12.31 திகதிக்கு SA-10 பிரகாரம் சொத்துக்கள் கொள்வனவு ரூபா 6,763,417 தொகையாவதுடன், நீதிமன்ற அமைச்சினால் சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா ரூபா 6,526,162 ஆகும். ஏனைய சொத்துக்கள் கொள்வனவு செய்தலுக்கான ரூபா 237,255 தொகைக்குரியதாவது அமைச்சினால மாவட்ட செயலகங்களிற்கு செலவின விடய இலக்கம் 110-1-5-2102 இன் கீழ் சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளிலிருந்தான செலவினமாகும். ஆமைச்சின் கீழ் மாவட்ட செயலகம்/பிரதேச செயலகங்களில் இணைந்துள்ள ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களிற்கு தேவையான அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்தல் செலவின விடய இலக்கம் 110-1-5-2102 இன் கீழ் மேற்கொள்ளப்படுவதுடன், அந்த சொத்துக்களை கொள்வனவிற்காக பெறுகைகள் நடைமுறைகள் மற்றும் கணக்கு வைத்தல் பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்படும். அதன் போது சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டு இருக்காததனால், 2025 ஆண்டின் போது உரிய மூலதனமாக்கல் அமைச்சின் மூலம் மேற்கொள்வதனால் இந்த தவறை சரி செய்ய நடவடிக்கை எடுக்ககப்படும்.	நிதிக்கூற்றுக்களில் சரியாக பெறுமதியை குறிப்பிட வேண்டும்.

(இ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
உள்ளநாட்டு நிதியம் மீது செயல்படுத்தப்படும் 03 செயற்திட்டங்களிற்காக நிதிஏற்பாடு பிரதேச செயலகங்களிற்கு ஒப்படைத்து அதற்குரியதாக ரூபா 46,990,768 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், அந்த செலவினங்களை உறுதி செய்வதற்கான செலவின அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை.	கணக்காய்வு அவதானப்பில் சுற்றிக்காட்டியவாறு, 3 செலவின விடயங்களிற்குரியதாக நிதிஏற்பாடு பிரதேச செயலகங்களிற்கு ஒப்படைத்து அதற்குரிய செலவினத்தை அந்த பிரதேச செயலகங்கள் மூலம் மேற்கொண்டு திறைசேரி அச்சீட்டு பிரதிகள் மூலம் கணக்கீடு செய்யப்படும். அந்த செலவினங்களிற்குரிய வவுசர்கள் செலவினத்தை மேற்கொண்ட பிரதேச செயலகங்களில் உளள்து என குறிப்பிடுகிறேன்.	ஒப்படைக்கப்பட்ட நிதிஏற்பாடுகளிலிருந்து உரிய நோக்கங்களை அடைந்துக்கொள்ளப்பட் டிருப்பதா, என்பதற்காக உறுதி செய்துகொள்ள செலவின அறிக்கை பெறற்றுக்கொள்ள வேண்டும்.

2. ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன.

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	14 மீண்டெழும் செலவின விடயங்களிற்கு மற்றும் 16 மூலதன செலவின விடயங்களிற்குரியதாக நிதிஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 3,148,260,000 தொகை முழுமையாக செலவிடப்படாது எஞ்சியிருந்தது.	அமைச்சர் 2024 ஜுலை 31 கேட்டு விலகிய காரணத்தால் அமைச்சு அலுவலகத்திற்குரிய செலவின தலைப்பு எஞ்சியமை, செயற்திட்டங்களிற்குரியதாக, தொடர்புடைய நிறுவனம் நேரடியாக செலவினம் மேற்கொள்ளல் மற்றும் செலவின மீள் நிரப்பலுக்காக கோரி இல்லாமை, மத்தியஸ்த	தேவைபாட்டை சரியாக இனங்கண்டு மதிப்பீட்டை தயாரிக்க வேண்டும்.

		சபைக்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடுகளிற்குரிய செலவினம் அமைச்சின் மூலம் மேற்கொள்ளல், எதிர்ப்பார்த்த வாறு செலவு ஏற்படாமை மீது நிதிஏற்பாடு செலவிடப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.	
(ஆ)	04 செலவின விடயங்களிற்குரிய நிதிப்பிரமாணம் 66 மூலம் கூட்டுத்தொகை ரூபா 3,375,000 தொகை நிதிஏற்பாடு மாற்றப்பட்டிருந்த போதும், அந்த மாற்றப்பட்ட நிதிஏற்பாடு முழுமையாக பயன்படுத்தாது எஞ்சியிருந்தது.	கொள்கைரீதியான தீர்மானம், உரிய நேரத்திற்கு கட்டுநிதி கிடைக்காமை எதிர்ப்பார்த்தவாறு செலவினம் ஏற்படாமை மீது மாற்றப்பட்ட நிதிஏற்பாடு எஞ்சியிருந்தது என அறிவித்திருந்தது.	தேவைபாட்டை சரியாக இனங்கண்டு நிதிஏற்பாடு மாற்றுவதற்கு நடவடிக்கை வேண்டும்.
(இ)	110-1-1-0-1003-0/11 செலவு விடயத்திற்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 1,880,000 தொகை ஒதுக்கியிருந்த போதும், மீளாய்வாண்டு இறுதியில் அவ்வாறு ஒதுக்கிய பெறுமதி முழுமையாக எஞ்சியிருந்ததுடன், அந்த செலவு விடய நிதிஏற்பாடுகளின் மொத்த சேமிப்பு ரூபா 2,393,369 ஆனது.	110-1-1-0-1003-0/11 செலவு விடயத்திற்காக குறைநிரப்பு மதிப்பீடொன்றை தேசிய பாதீட்டு திணைக்களத்தினால் வழங்கியது அதிகரித்த வாழ்கை செலவு படிகளிற்காக மேலதிக செலவினை மேற்கொள்ளவாகும். எனினும் 2024 ஆண்டின் நடுப்பகுதியில் மதிப்பிற்குரிய அமைச்சரை போன்றே அதன் ஆளணியினரின் கேட்டு விலகுதலின் காரணமாக எதிர்பார்த்தவாறு செலவிட தேவை ஏற்படாததால் நிதிஏற்பாடு எஞ்சியுள்ளது.	தேவைபாட்டை சரியாக இனங்கண்டு குறைநிரப்பு பெற்றுக் கொள்ள வேண்டும்.
(ஈ)	21 மீண்டெழும் செலவின விடயங்களினது மற்றும் 11 மூலதன செலவின விடயங்களினது நிதிஏற்பாடு ரூபா 2,326,071,250 இலிருந்து ரூபா 1,406,807,233 தொகை எஞ்சியிருந்ததுடன், அது 16 முதல் 98 சதவீத வீச்சளவை கெண்டிருந்தது.	பாதீட்டு சுற்றறிக்கை பிரகாரம் செலவினம் மட்டுப்படுத்தமை, எதிர்ப்பார்த்தவாறு செலவினம் ஏற்படாமை, எதிர்ப்பார்த்த செயற்திட்டங்களுக்காக அங்கீகாரம் பெறப்படாமை, வரி மீள்நிரப்புவதற்கு கோரிக்கை செய்யாமை, தேர்த்தல் காலஎல்லையினுள் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்த முடியாதிருந்தமை போன்ற விடயங்கள் காரணங்களானது என அறிவிக்கப்பட்டுள்ளது.	திட்டமிடப்பட்ட கடமைகளை எதிர்ப்பார்த்தவாறு மேற்கொள்ள வேண்டும்.

(உ)	110-1-2-24-2509-17 செலவின விடயம் அதாவது இலங்கை நீதிமன்ற துறைக்காக ஆதரவளிக்கும் முன்னேற்றத்திற்காக ரூபா 19,490,000 தொகை நிதிஏற்பாடு ஒதுக்கப்ட்டிருந்த போதும், 2024 ஜுன் மாதம் இணைய வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக, வெட் வரி செலவினமான ரூபா 224,796 தொகை மாத்திரம் இந்த செலவின விடயத்தின் கீழ் செலவிடப்படடிருந்தது.	Support to Justice Sector செயற்திட்டத்திற்காக 110-01-02-024-2509 மற்றும் 110-01-02-034-2509 ஆக இரண்டு செலவின விடயங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. மேற்குறித்த விடயத்தினால் குறிப்பிட்டுள்ள செலவின விடயத்தின் கீழ் செயற்திட்டம் நடைபெறுவதுடன், அமைச்சிற்கு வழங்கப்படும் நிதிஏற்பாட்டின் கீழ் இடம்பெற்ற செலவினத்தை கணக்கீடு செய்ய வேண்டியதுடன், 110-01-02-034-2509 செலவின விடயம் இந்த அமைச்சின் கோரிக்கையின்றி வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் உள்ளடக்கப்பட்டதாகும்.	தேவைபாட்டை இனங்கண்டு திட்டமிடல் மற்றும் திட்டமிட்ட கடமைகளை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

அவதானிப்பு		**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	**பெறுமதி** **ரூபா**		
2018 சனவரி 24 ஆம் திகதிய 5/2018(I) இலக்க சுற்றறிக்கையினால் திருத்திய 2008 பெப்ரவரி 06 திகதிய 5/2008 இலக்க சுற்றறிக்கை	பிரஜைகள்/சேவை பெறுநர் சத்தியப் பிரமாணத்தை தயாரித்திது இருக்கவில்லை.	சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.	2025 ஆகஸ்ட் முடிவடைய முன்னர் உள்ளக நடவடிக்கை பிரிவினால் தயாரிக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன..

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	நீதிமன்ற துறைக்கு ஆதரவளிக்கும் செயற்திட்டத்திலிருந்து (SJSP) ரூபா 15 மில்லியன் தொகையான நிதியை பயன்படுத்தி பிராந்திய பயிற்சி நிகழ்ச்சி திட்டங்கள் மூலம் 3000 உத்தியோகத்தர்ளை பயிற்றுவிப்பதற்கு திட்டமிட்டு இருந்த போதும், நிதி கிடைக்காத காரணத்தால் நடைமுறைபடுத்திருக்கவில் லை.	அரசின் மூலம் வழங்கப்படும் நிதியம் மற்றும் Support to Justice Sector செயற்திட்டத்தின் மூலம் பெற்றுக்கொள்ளும் வசதிகளை பயன்படுத்திக் கொண்டு நிதிமன்றங்களில் சேவையில் ஈடுப்பட்டுள்ள சுமார் 3000 உத்தியோகத்தர்களை மேவுகை செய்யும் வகையில் 2024 ஆண்டினுள் வலயம் சார் (பிராந்திய) 06 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்த திட்டமிடப்பட்டிருந்தன. எனினும், 2024 ஆண்டிற்காக Support to Justice Sector செயற்திட்டத்தின் கீழ் வலயம் சார் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்காக வசதிகள் கிடைக்காததுடன், தேசிய பாதீட்டு சுற்றறிக்கை 01/2024 இன் கீழ் உள்ள ஏற்பாடுகளிற்கு இணங்கி அந்த நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக தேவையான வசதிகளை பெற்றுக் கொள்வது கடினமான காரணத்தால் வலயசார் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த முடியவில்லை.	உரிய ஆய்வொன்றின் மூலம் திட்டங்கள் தயாரித்து நடைமுறைபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையான கணக்கியல் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 300,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டதுடன், இதனூடாக அண்ணளவாக 250 உத்தியோகத்தர்களிற்கு மீளாய்வாண்டு இறுதியளவில் பயிற்றுவித்து முடிவுறுத்த இருந்த போதும், இந்த நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்திருக்கவில்லை.	பயிற்றுவிப்பு நிறுவனத்தை மீண்டும் வேறு இடமொன்றிற்கு கொண்டு செலவதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளதால், கணனி விஞ்ஞானகூடத்தை இணையமயப்படுத்தல் மற்றும் அதற்காக இணைய வசதிகளை பெற்றுக் கொள்ள முடியாததன் மீது கணனி விஞ்ஞானகூடத்தை செயற்படு நிலையில் பேணிக் கொள்ள முடியாது போனதால், பயிற்ச்சி நிகழ்ச்சித் திட்ட்ஙகளை நடாத்த முடியாது	திட்டமிடப்பட்ட கடமைகளை உரியவாறு செயற்படுத்த வேண்டும்.

		போனதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	
(இ)	தேசிய ஒருங்கிணைப்ப பிரிவின் கீழ் செயற்படும் நல்லிணக்க சங்கங்களை அமைத்தல் மற்றும் மறுசீரமைப்பதற்காக (110-1-5-14-2509) பிரதேச செயலகங்கள் 22 இற்காக ரூபா 584,075 வழங்கப்பட்ட நிதிஏற்பாடு செலவிடப்பட்டிருக்கவில்லை.	நல்லிணக்க சங்கங்களை அமைத்தல் மற்றும் மறுசீரமைப்பதற்காக ஒதுக்கிய ரூபா 2 மில்லியன் நிதிஏற்பாட்டின் மூலம் 15 மாவட்ட செயலகங்களிற்கு ரூபா 1,962,144 நிதிஏற்பாடு விடுவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறாயினும், 3 ஆம் மற்றும் 4 ஆம் காலாண்டு இரண்டினுள் சனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்த்தல் நடந்த காலப் பகுதியில நல்லிணக்க சங்கங்களை அமைப்பது போன்ற செயற்திட்டங்களை செயற்படுத்துவதனை தேர்த்தல் சட்டம் மூலம் தடை செய்திருந்த காரணத்தால் பிரதேச செயலகங்களிற்கு விடுவித்த ரூபா 584,075 நிதிஏற்பாடு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.	திட்டமிடப்பட்ட கடமைகளை உரியவாறு செயற்படுத்த வேண்டும்.
(ஈ)	2016 மார்ச் 29 திகதி மற்றும் 2023 ஜுன் 09 திகதி நடந்த அரச கணக்குகள் மீதான செயற்குழுவின் மூலம் வழங்கிய கட்டளை பிரகாரம் 1877 இன் 16 இலக்க சிறைசாலைகள் கட்டளை சட்டத்திற்கு பதிலாக புதிய சட்டமொன்றை தயாரிக்கும் செயற்பாடுகளையும் 2024 திசெம்பர் 31 திகதி வரை முடிவுறுத்தி இருக்கவில்லை.	சிறைசாலைகள் கட்டளை சட்ட திருத்தம் தொடர்பான பரிந்துரை சட்டமா அதிபர் திணைக்களத்தினால் இந்த அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், அந்த பரிந்துரைக்காக சிறைசாலைகள் ஆணையாளர் நாயகத்தின் உத்தேசம் மற்றும் பரிந்துரைகளை மேலும் இந்த அமைச்சினால் ஆய்வு செய்துகொண்டு இருப்பதாகவும், 2025 திசெம்பர் அளவில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க திட்டமிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	அரச கணக்குகளுக்கான செயற் குழுவின் கட்டளைகளை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மத்தியஸ்த உத்தியோகத்தர்களிற்காக மீளாய்வாண்டின் போது நடை பெறுவதற்கு திட்டமிட்டிருந்த மொத்த பயிற்சி எண்ணிக்கை 203 ஆனதுடன், ஆண்டினுள் அரச நிதி எற்பாட்டின் மூலம் மற்றும் SEDR செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள மொத்த நிகழ்ச்சித்திட்ட அளவு 40 ஆவதடன், அது 19 சதவிதமான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.	போதுமான நிதிஏற்பாடு பெறப்படாமை காரணத்தால் திட்டத்தின் பிரகாரம் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த முடியாமலிருந்தது என அறிவித்திருந்தது.	உரிய ஆய்வொன்றின் பின்னர் திட்டங்கள் தயாரித்து நடைமுறைபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றது.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	Fabrication of Record room racks for the court of Appeal ரூபா 15.7 மில்லியனிற்கு தனியார் நிறுவனமொன்றிற்கு 2024 ஒக்டோபர் 23 ஆம் திகதி வழங்கியிருந்த போதும், குறித்த ஒப்பந்தத்திற்காக உடன்படிக்கை செய்திருந்தது 2024 நவம்பர் 22 ஆவதுடன், அதற்காக ஒரு மாதத்திற்கு அதிக காலம் செலவிடப்பட்டிருந்தது. இந்த அறிக்கை திகதி வரை குறித்த பணியை நிறைவு செய்திருக்கவில்லை.	செயலாற்றுகை பிணை முறியை உறுதி செய்து கொள்ளும் தாமதத்தின் மீது உடன்படிக்கையிடல் தாமதமானதாகவும், ஒப்பந்த நிறுவனம் இறாக்கைகளை வழங்கியிருந்த போதும், இடப்பாடு மட்டுப்பாடாகையால் இறாக்கைகளை பொருத்துவது தாமதித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.	உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	உறுதிமொழி ஆணையாளர், அவசர மரண பரிசோதகர், சமாதான நீதவான் மற்றும் உறுதிமொழி வழங்கிய	முறைமையை அமைப்பதனை மொடியுலாக அபிவிருத்தி செய்வதுடன், அவற்றில் 04 இனை நிறைவு	உடன்படிக்கை பிரகாரம் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மொழி பெயர்ப்பாளர் பதவிகளிற்காக தகவல் முகாமைத்துவ முறைமையொன்றை அமைக்கும் பணியை 03 மாதங்களினுள் ரூபா 20,095,000 இற்கு நிறைவு செய்ய 2024 ஜுன் 19 திகதி தெரிவு செய்த ஒப்பந்த நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்திருந்த போதும், மீளாய்வாண்டு இறுதி வரை பணியை நிறைவு செய்திருக்கவில்லை.	செய்துள்ளதுடன், UNDP நிறுவனத்தின் மூலம் நிதிஏற்பாடு தாமதித்ததன் மீது பணியை நிறைவு செய்யும் காலத்தை நீடித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	

4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன..

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	நீதிமன்ற உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்கும் அலகின் செயற்பாடான கணனி பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை ஆண்டினுள் ஆரம்பித்திருக்காததுடன், கணனி அலகும் செயற்படும் நிலையில் இருக்கவிலலை. கணனி இரசாயணகூடத்தில் காணப்படும் CPU 23, மற்றும் Monitor 26 மற்றும் UPS 39 மற்றும் தளபாட உபகரணங்கள் விளைவற்று காணப்பட்டன.	நீதிமன்றல்லாத உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்கும் நிறுவனத்தை அடிக்கடி பல இடங்களிற்கு எடுத்துச் செல்ல நேர்ந்த காரணத்தால் கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்படும் கணனி உதிரிப்பாகங்கள் விளைவற்று காணப்பட்டன. இந்த பிரிவை நீதிமன்ற அமைச்சு வளவில் நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் கணனி இரசாயணகூடமொன்றை அங்கு நிறுவுவதற்கு மற்றும் விளைவற்று காணப்படும் கணனி உதிரிப்பாகங்களை பயன்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் 35009871A கொண்ட CPU இயந்திரத்தை களஞ்சியத்திற்கு ஒப்படைத்துள்ளதுடன், அதனை பரீட்சிப்பதற்காக தகவல் தொழில்நுட்ப பிரிவிற்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனை பயன்படுத்த முடியுமான நிலையில் காணப்படுமாயின் CPU இயந்திரமொன்றின் தேவைப்பாடு காணப்படும் பிரிவிற்கு வழங்க நடவடிக்கை	திட்டமிட்டவாறு பணிகளை மேற்கொள்ள வேண்டியதுடன், உபகரணங்களை பயன்படுத்துவதற்கான செயற்பாடுகளை எடுக்க வேண்டும்.

		எடுக்கப்படும்.	
(ஆ)	மோடார் சைக்கில் ஒன்றை மற்றும் முச்சக்கர வண்டியொன்றை பராதீனம் செய்வதற்காக உத்தேசித்திருந்த போதும், அதனை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரையும் பராதீனம் செய்ய நடவடிகககை எடுத்திருக்கவில்லை.	WPQB 2005 முச்சக்கர வண்டி மாதறை நீதிதவான் நீதிமன்றத்தால் அரசுடமையாக்கப்பட்ட வண்டி ஒன்றாவதுடன், 2014.08.26 திகதி முதல் மாதறை நீதிபதியனால் இந்த அமைச்சிற்கு வழஙகப்பட்டுள்ளது. பராதீனம் செய்ய முன்னர் இதன் பதிவு சான்றிதழிலன் நிழற்பிரதி ஒன்றை பெற்றுக் கொள்ள வேண்டியதுடன், அதற்கான கோரிக்கை மோடார் வாகன போக்குவரத்து ஆணையாளரிற்கு அனுப்பப்பட வேண்டும். அதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. WPMO 2024 மோடார் சைக்கில் தொடர்பாக பௌதீக ரீதியாக மற்றும் ஆவண ரீதியாக பரீட்சித்துக் கொண்டு இருப்பதுடன், காணப்படும் குறைகளை கண்டறிந்து நிறைவு செய்து கொண்ட பின்னர் பராதீனம் செய்ய நடவடிக்கை எடுப்பதென.	பண்டக கணிப்பீட்டு சபை பரிந்துரையை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	கெப் வண்டியொன்று விபத்திற்குள்ளாகி 06 ஆண்டுகளிற்கு அதிக காலம் கடந்துள்ள போதும், இந்த வண்டியின் செஸி இலக்கம் மற்றும் இயந்திர இலக்கத்தை மோடார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் தரவுகளுடன் இணங்காததால் மோடார் வாகன திணைக்களத்தினால் புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அந்த புலனாய்வு நடவடிக்கைகளை ஆரம்பித்து ஓராண்டிற்கு அதிக காலம் கடந்துள்ள போதும், நிறைவு செய்திருக்கவில்லை.	PA 5045 கொண்ட வண்டியின் பௌதீக பரீட்சிப்பு தொடர்பாக தற்போதைய நிலைமை தொடர்பாக அறிவுருத்துமாறு கோரி மோடார் வாகன போக்குவரத்து ஆணையாளர் புலனாய்விற்கு அனுப்பப்பட்டுள்ளது. அது தொடர்பான பதில் கிடைக்காததால், மீண்டும் நினைவூட்டல் அனுப்பி புலனாய்வு செயற்பாடுகள் முடிவடைந்தவுடன் அதன் பிரகாரம் முன்நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	புலனாய்வு நடவடிக்கைகளை விரைவில் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஈ)	சனாதிபதி செயலகம், மீன்பிடி அமைச்சு மற்றும் நீதிமன்ற அமைச்சின் கீழ் காணப்படும் 04 நிறுவனங்கள் உள்ளடங்களாக 06 நிறுவனங்களிற்காக 12 வாகனங்களை வழங்கியிருந்ததுடன், அவற்றை மீள் சுவீகரிக்க அல்லது அந்த நிறுவனங்களிற்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இது தொடர்பான தகவல்களை கண்டறிந்து அமைச்சின் அங்கீகாரத்தின் மீது அந்த வாகனத்தை பௌதீக ரீதியாக ஒப்படைத்துள்ள நிறுவனத்திற்கு ஒப்படைத்து முன்நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.	குறித்த வாகனத்தை சுவீகரிக்க அல்லது ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	நீதிமன்ற அமைச்சினால் பாவிக்கும் நுவரெலிய சுற்றுலா விடுதி அமைந்துள்ள 0.2023 ஹெக்டயார் அளவான காணி, இறக்குவான சுற்றுலா விடுதி அமைந்துள்ள ரூட் 01 பர்சஸ் 10 அளவான காணி, பத்தரமுல்ல சிறுவர் நீதமான் நீதிமன்றம் அமைந்துள்ள 0.1760 ஹெக்டயார் காணி மற்றும் நீதிமன்ற கூடம் அமைக்கப்படும் BCC இலங்கை கம்பனிக்கு உரிய 2.4281 ஹெக்டயார் (ஏக்கர் 06) காணியை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	முன்நடவடிக்கை தொடர்பாக பின்னூட்டல் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	காணி சுவீகரிக்கும் நடவடிக்கைகளை நிறைவு செய்ய வேண்டும்.

4.5 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	பிரதபிரதபிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிதிப்பிரமாணம் 880 பிரகாரம் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் பிணைக்கட்டளைச்சட்டம் மற்றம் நீதிமன்ற அமைச்சின் 2011 சனவரி 18 ஆம் திகதிய 01/2011 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பிணை வெக்க வேண்டிய 12 உத்தியோகத்தர்கள் 2024 திசெம்பர் 31 திகதி வரை பிணை வெத்திருக்கவில்லை.	இந்த அமைச்சின் பிணை வைக்காத உத்தியோகத்தர்களினது பிணை வைக்கும் விண்ணப்பங்கள் 2024.10.13 திகதி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளன.	நிதிப்பிரமாணம் பிரகாரம பிணை வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.6 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதபிரதபிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	கெப் வண்டியொன்று 2020 சனவரி 17 திகதி விபத்திற்குள்ளாகி இருந்ததுடன், 2021 நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 104(4) கீழ் நட்டங்கள் தொடர்பான இறுதி அறிக்கை பிரகாரம் காப்புறுதி நிறுவனத்தனால் மீள்நிரப்பு செய்யாத ரூபா 218,175 ஆன நிலுவை தொகையை சாரதியிடமிருந்து அறவிட பரிந்துரைத்திருந்த போதும், அதனை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு நட்டத்தை அறவிட தேவையான நடவடிக்கை எடுக்குமாறு குறித்த உத்தியோகத்தர்களை அறிவுருத்தியுள்ளதென.	பின்தொடர் நடவடிக்கைகளை விரைவில் முடிவுறுத்தி நட்டங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2024 ஏப்ரல் 09 ஆம் திகதி WPPH 1288 கொண்ட வண்டியின் முன்பக்க இலக்கத் தட்டு காணாமல் போனது தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(3) கீழ் நட்டம் தொடர்பாக ஆரம்ப அறிக்கையை 2024 ஏப்ரல் 10 திகதி சமர்ப்பித்திருந்த போதும், இறுத் அறிக்கையை கணக்காய்வு திகதி வரை வழங்கியிருக்கவில்லை. மேலும், இந்த கெப் வண்டி 2024 ஆகஸ்ட் 26 திகதியும் விபத்திற்கு உள்ளாகியிருந்தது.	நிதிப்பிரமாணம் 104 பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு குறித்த உத்தியோகத்தர்களை அறிவுருத்தியுள்ளதென.	நட்ட ஈடு தொடர்பாக புலனாய்வு மேற்கொள்ளல் மற்றும் அறிக்கையிடல் மேற்கொள்ளல்.
(இ)	மத்தியஸ்த சபைகளினால் மீளாய்வாண்டினுள் தீர்க்கப்படவிருந்த மொத்த பிணக்குகளின் எண்ணிக்கை 233,648 ஆனதுடன், அவற்றில் தீர்த்து சான்றிதழ்களை வழங்கிய மொத்த பிணக்களின் எண்ணிக்கை 67,044 ஆனது. அது சதவீதமாக 29 சதவீதமான குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன்,	மத்தியஸ்த முறைமை தொடர்பாக பொது மக்களின் அறியாமை இதற்கு காரணமாக உள்ளதாக இனங்காணப்பட்டுள்ளதுடன், மத்தியஸ்த முறைமை தொடர்பாக பொது மக்களின் விழிப்புணர்வு மற்றும் நம்பிக்கையை மேம்படுத்த சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல் மற்றும் பிரதேச செயலக	பிரச்சினைகளை தீர்ப்பதனை விரைவுபடுத்த வேண்டியதுடன், மத்தியஸ்தம் தொடர்பாக பொது மக்களை அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	அவற்றில் வழக்கு தொடரக் கோரும் தரப்பினர் வருகை தராததால் தீர்ப்பு செய்யப்படாத பிணைக்குகளின் எண்ணிக்கை 91,083 ஆகும்.	மட்டத்தில் மத்தியஸ்த அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் ஊடாக அரச உத்தியோகத்தர் மற்றும் சமூகத்தை விழிப்பூட்டல் செய்வதென.	
(ஈ)	மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு கூட்டங்களிற்கு அங்கத்தவர்களின் வருகை பற்றிய பரீட்சிப்பின் போது அங்கு ஒரு அங்கத்தவரின் பங்குபற்றல் கீழ் மட்டத்தில் காணப்பட்டது. 2024 ஆண்டு சனவரி முதல் செப்டம்பர் வரை நடாத்தியிருந்த 33 கூட்டங்களில் 04 கூட்டங்களிற்கு மாத்திரம் பங்குபற்றி இருந்ததுடன், ரூபா 25,000 வீதமான மாதாந்த படிகளை 04 மாதங்களிற்காக பெறப்பட்டிருந்தது.	இது தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடனும் கலந்துரையாடியதுடன், இந்த படியை கூட்டங்களிற்கான பங்குபற்றல் படிகளாக (ளுவைவவைபெ யுடடழறயஉெந) திருத்துவதற்கு முன்மொழியப்பட்டது. அது தொடர்பான முன்நடவடிக்கைகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும்.	உறுப்பினர்களை கூட்டங்களிற்கு பங்கேற்க வைக்க நடவடிக்கை எடுக்க வெண்டும்.
(உ)	மத்தியஸ்த சபைகள் 329 இற்கிடையே 2024 ஜுன் 30 திகதிக்கு முன்னர் பதிவிக் காலம் முடிவடைந்துள்ள வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 175 மத்தியஸ்த சபைகளிற்கு கணக்காய்வு திகதி வரை நியமனம் செய்திருக்கவில்லை. இதற்கிடையே மொத்த மத்தியஸ்த சபைகள் 72 இனது பதிவிக் காலம் முடிவடைந்து 03 ஆண்டுகளிற்கு அதிக காலம் கடந்திருந்தது.	2023 ஆண்டில் போன்றே 2024 ஆண்டிலும் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்ட நிதிஏற்பாடு போதாமை (ரூபா 25 மில்லியன் கோரிய போதும், 2024 ஆண்டிற்காக ரூபா 0.5 மாத்திரம் ஒதுக்கப்பட்டிருந்தது.) மீது எதிர்பார்த்தவாறு மத்தியஸ்தத்தில் திறமை மற்றும் மூலோபாயம் தொடர்பான ஐந்து நாள் பயிற்சி செயலமர்வை நடாத்த முடியாது போனதுடன், அதனால் புதிய அங்கத்தவர்களிற்கு நியமனம் வழங்குதல் தாமதித்துள்ளது.	மத்தியஸ்த சபைகளை நிறுவுதல் மற்றும் உறுப்பினர்களை நியமனம் செய்தல் விரைவில் செய்யப்பட வேண்டும்.
(ஊ)	பணி நீக்கம் செய்யப்பட்ட 04 உத்தியோகத்தரிடமிருந்து மற்றும் சேவையை விட்டுச் சென்ற 02 உத்தியோகத்தர் இடமிருந்து அறவிட வேண்டிய கூட்டுத் தொகை ரூபா 695,221 ஆன கடன் மீதி 05 ஆண்டுகளிற்கு அதிக காலமாக அறவிடப்படாது காணப்பட்டது.	பணி நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், சேவையை விட்டுச் சென்ற இரண்டு உத்தியோகத்தரின் கடன் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	கடனை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(எ)	யாழ்பாண மாவட்டத்தில் மழை நீரை ஒன்றுசேர்க்கும்	இந்திய அரசினால் நிதியீட்டப்படும் இந்த	திட்டமிட்ட கடமைகளை

	3000 தாங்கிளை நிர்மாணிக்கும் செயற்திட்டம் இந்திய அரசு மற்றும் இலங்கை அரசிற்கு இடையே புரிந்துணர்பு உடன்படிக்கை கைச்சாத்திடாததன் மீது ரூபா 160 மில்லியன் எஞ்சியிருந்தது. தற்போது செயற்திட்ட காலம் முடிவடைந்துள்ளதால், அதன் பௌதீக முன்னேற்றம் 22 சதவீதமான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.	செயற்திட்டத்தின் இரு நாடுகளிற்கு இடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை காலம் முடிவடைந்ததுடன் இதுவரை நீடிக்கப்படவில்லை. இதற்காக புரிந்துணர்வு உடன்படிக்கையை நீடிப்பது தொடர்பான செயற்பாடுகள் கலந்துரையாடல் மட்டத்தில் உள்ளன. எவ்வாறாயினும், இது 02 அரசுகளிற்கு இடையேயான உடன்படிக்கை ஆகையால் விரைவில் முன்நடவடிக்கை மேற்கொள்வது தேசிய ஒருங்கிணைப்பு பிரிவினால் மேற்கொள்ளப்படும்.	உரியவாறு பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஏ)	ரூபா 300 மில்லியன் தொகை வெளிநாட்டு மானியம் மற்றும் ரூபா 500,000 தொகை வெளிநாட்டு நிதியுதவியுடன் உள்ளடங்கிய புதிய சமூக ஒருங்கிணைந்த செயற்திட்ட முன்மொழிவு அங்கீகரிக்கப்படாத காரணத்தால், அமைச்சுடன் செயற்படும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.	அந்த செயற்திட்ட உத்தேசம் அங்கீகரிக்கப்படாததனால் செயற்பாட்டு உடன்படிக்கை கைச்சாத்திடபப்படவில்லை.	திட்டமிட்ட கடமைகளை உரியவாறு பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.